# சிறுபாசனம் மற்றும் நீர் மேலாண்மை

## (இனம் - 3)

01. தமிழ் நாடானது, நிலவியல் பரப்பில் 13 மில்லியன் ஹெக்டேர் அளவில் நாட்டில் 11ஆவது இடத்தை வகிக்கிறது. நிலவியல் பகுதியில் பாதி பயிரிடத் தக்கவையாகும். 6 மில்லியன் ஹெக்டேர்கள் நிகர விதைப்பு பகுதியாகும். பயிரிடத்தக்க மொத்தப் பகுதியில் 50 விழுக்காடு பகுதியானது நீர்ப்பாசனத்தை (3 மில்லியன் ஹெக்டேர்கள்) பெறுகிறது அதில் இயற்கைக் கால்வாயிலிருந்து (0.95 மில்லியன் ஹெக்டேர்கள்), ஏரியிலிருந்து (0.90 மில்லியன் ஹெக்டேர்கள்), ஆழ்துளைக் கிணறுகள் முதலியன உள்ளிட்ட கிணறுகளிலிருந்து (1.15 மில்லியன் ஹெக்டேர்கள்) பெறுகிறது. தமிழ் நாடானது நீர் பாசனத்திற்கான தனது மேற்பரப்பு நீர் வாய்ப்பு வளம் அனைத்தையும் பயன்படுத்தித் தீர்த்து விட்டபடியால், பெரும் மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு மிகக் குறைந்த வாய்ப்பே உள்ளது. இவ்வாறாகத் தமிழ் நாட்டு நீர்ப்பாசனத்தின் எதிர்கால வளர்ச்சியானது, பயனோக்கி நீரைச் சேமித்து வைத்தல், கால்வாய் மற்றும் ஏரிப்பாசனத்தை நவீனமயமாக்கல், இப்போதுள்ள நீர்பாசன ஆதாரங்களிலுள்ள நீரைக் கொண்டு சமாளித்தல் மற்றும் சிறுபாசனத்தை பெரிதும் பயன்படுத்துதல் ஆகியவற்றையே மையமாகச் சார்ந்திருக்க வேண்டியிருகிறது.

02. தமிழ்நாட்டில் 39202 ஏரிகள் உள்ளன. அதில் 3697 இயற்கையாக அமைந்த ஏரிகள், 5242 வெட்டப்பட்ட ஏரிகள். 9850 முன்னாள் ஜமீன் ஏரிகள், மற்றும் 20413 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் ஆகும். பொதுப்பணித்துறை மூலம் அரசு வெட்டப்பட்ட மற்றும் வெட்டப்படாத ஏரிகளை பராமரித்து வருகிறது.

03. ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டங்கள் உள்பட சிறுபாசனத்திட்டங்கள் அரசால் செயற்படுத்தப் படுகின்றன. 100 முதல் 200 வரையிலான ஹெக்டேருக்கிடையே உள்ள பாசனப் பரப்புடன் கூடிய வானம் பார்த்த ஏரிகளையும், சில முன்னாள் ஜமீன் ஏரிகளையும் மேம்படுத்துவதற்கு 115 கோடி ரூபாய் செலவிலான முதல் கட்டத்திட்டம் 1989 ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதே திட்டத்தில், இரண்டாம் கட்டமானது, 50 ஏரிகளை நவீனப்படுத்தலை உள்ளடக்கியுள்ளது. அரசிடமிருந்து அல்லாமல் வெளியிலிருந்து கிடைக்கக்கூடிய நிதியினை கொண்டு திட்டத்தின் III-வது கட்டத்தில் 3,000 ஏரிகளைச் சீரமைக்க திட்டம் மேற் கொள்ளலாம் என்ற கருத்தும் ஒன்று உள்ளது.

04. அரசு, பொதுப்பணித் துறையில் நீர்வள ஆதாரங்கள் அமைப்பை நிறுவுவதற்கும், வடிநிலப் பாதையுடன் கூடிய நீர்ப்பாசனம் தொடர்பிலான அனைத்து வகை நடவடிக்கைகளைப் பரவலாக்கவும் ஆணையிட்டுள்ளது. வடிநிலங்கள், தலைமைப் பொறியாளர்கள் அடிநிலைத்தரத்திலுள்ள வடிநில மேலாளர்களின் தலைமையில் அமைய வேண்டுமென அதில் ஆணையிடப்பட்டுள்ளது. பின்வரும் தலைமை யிடங்களுடன் கூடிய நீர்வள ஆதார அமைப்பின் செயற்பாட்டுப் பகுதிகள் வருமாறு:–

1. திட்டவடிவாக்கம், சென்னை.
2. வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதரவளிப்பு, சென்னை.
3. இயக்கமும் பராமரிப்பும், சென்னை.
4. மாநில நில, மேற்பரப்பு நீர்வள ஆதார விவர வகைபாட்டு மையம், சென்னை.
5. நீர்வள ஆதார நிறுவனம், சென்னை மண்டலம், சென்னை.
6. நீர்வள ஆதார நிறுவனம், திருச்சி மண்டலம், திருச்சி.
7. நீர்வள ஆதார நிறுவனம், பொள்ளாச்சி மண்டலம், பொள்ளாச்சி.
8. நீர்வள ஆதார நிறுவனம், மதுரை மண்டலம், மதுரை.

சென்னை – 5 இல் உள்ள நீர்வள ஆதார நிறுவனத்தின் பொறியாளர் – தலைவர் அவர்கள் பாசன பராமரிப்பு தொடர்பிலான நடவடிக்கைகள், பாசன ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் நீர்வள ஆதார நிறுவனத்தின் பிற நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பிலான அனைத்து பொருண்மைகளிலும் வடிநில பராமரிப்பு மேலாளர்களையும் ஏனைய தலைமை பொறியாளர்களையும் ஒருங்கிணைப்பார். தலைமைப் பொறியாளர், முக்கியச் செயல்முறைகள், பராமரிப்பு மற்றும் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றுடன் அமைந்த பாசனம் தொடர்பிலான துணைப்பணிகள் அனைத்திற்குமான தனிச்சிறப்புடைய செயல்பாடுகளையும் கண்காணிப்பார்.

05. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் சிற்றூராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சில அதிகாரங்களைத் தெளிவான வகையில் அளித்துள்ளது. அவை வருமாறு :

"அரசாங்கம், நிர்ணயிக்கப்படக் கூடிய நிபந்தனைகளுக்கும். கட்டுப்பாடு களுக்கும் உட்பட்டு ஊராட்சிக்கோ அல்லது வட்டார ஊராட்சி மன்றத்துக்கோ, நீர்பாசன அமைப்பைப் பாதுகாத்தல், பராமரித்தல், நீர்ப்பாசன முறைகளை மேலாண்மை செய்தல் அல்லது ஒரு நீர்ப்பாசன அமைப்பைச் சேர்ந்த நிலங்களுக்கு நீர் பகிர்மானம் செய்தலை ஒழுங்குபடுத்துதல் முதலிய அலுவல்களை மாற்றலாம்". (133 (1)).

"ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சி மன்றம், நிர்ணயிக்கப்படக் கூடிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, கிராமத்திலுள்ள ஒரு நீர்ப்பாசன அமைப்பின் மூலாதாரத்திற்கு குடிமராமத்துச் செய்யவும் அல்லது அதற்காக, மேற்குறிப்பிடப் படக்கூடிய வரிவிதிக்கவும் அதிகாரமுடையது" (பிரிவு : 133 (2)).

**வரம்புரை**

"இருப்பினும், இந்த உட்பிரிவிலுள்ள எதுவும், நீர்ப்பாசன அமைப்பின் ஆதாரத்திற்கு ஊராட்சி குடிமராமத்து செய்பத் தவறின காலத்து, "தமிழ்நாடு கட்டாய உழைப்புச் சட்டம் 1858" (மத்திய சட்டம் 1858) கிராம சமுதாயத்தையும் அதன் எந்த உறுப்பினரையும் அதன் பொறுப்பிலிருந்தோ அவரது பொறுப்பிலிருந்தோ விடுவிக்காது". (133 (2)).

"நீர்பாசன அமைப்பின் பாதுகாப்பு இந்தப் பிரிவின் படி மாற்றப்படும் போது அவ்வமைப்பிலுள்ள அரசாங்கத்தின் மீன்பிடிக்கும் உரிமையும் மாற்றப்பட்டு நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் கட்டுப்பாடுகளுக்கு (இந்த வருமானத்தை உபயோகிக்க உண்டான நிபந்தனைகள் கட்டுப்பாடுகள் உட்பட) உட்பட்டு தக்கவாறாக ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சியை சேரும்". (133 (3))

06. சிறுபாசனம் மற்றும் நீர் பராமரிப்பு தொடர்பிலான அனைத்து வகை நடவடிக்கைகள் நேர்வில், இருவகையான நடவடிக்கைகள் உள்ளன:– (i) நீர்ப்பாசன ஆதாரங் களையும் ஏரிகளையும் அமைத்தல் மற்றும் (ii) நீர்வள ஆதாரங்களைப் பராமரித்தல். ஊராட்சி ஒன்றியங்கள் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டங்கள் மற்றும் ஜீவன்தாரா திட்டங்களின் கீழ் குளங்கள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகளை அமைத்து பராமரிக்கின்றன. 40 ஹெக்டேர்க்குக் குறையாத பாசனப் பரப்பை உடைய நீர்ப்பாசன ஏரிகளை பராமரிப்பதற்குரிய அதிகாரங்களைக் கொண்ட உரிமையால், ஊராட்சி ஒன்றியங்கள் அப்பராமரிப்பை எடுத்துக் கொள்வதற்குக் கடமைப் பட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் குடிமராமத்து பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டிருந்த போதிலும், அதன் செயல்பாடுகள் பற்றி இனிமேல் தான் தெரியவரும். சிற்றூராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சட்டமுறையான நீர்பாசன மானியம் இல்லை என்றாலும். இச்சட்டத்தின் கீழ், அரசு, நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து நீர்ப்பங்கீடு தொடர்பிலான பணிகள் அங்குள்ள ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கலாம். அங்குள்ள ஊராட்சி அமைப்புகளும் குடிமராமத்துப் பணிகளுக்கான கட்டணத்தை விதிக்க இயலும். ஊராட்சி ஒன்றியம் தன்னுடைய நிதியிலிருந்து எந்த செலவினைத்தையும் மேற்கொள்ளலாமென எதிர்பாக்க இயலாது. எனவே, பராமரிப்பானது, அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய மானியத்தைப் பொறுத்தே உள்ளது. இந்த ஏரி நீர்ப்பாசன வள ஆதாரப் பராமரிப்பானது சிற்றூராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒப்படைக்க விருப்பதால், பராமரிப்புக்கான சுழற்சி முறையை அரசு மேம்படுத்த வேண்டும். முதல்

மாநில நிதி ஆணையம், 5 ஆண்டு சுழற்சி முறையைப் பரிந்துரைத்துள்ளது. இப்பின்னணியில் மாவட்ட ஊராட்சிக்கு நீர்பாசனம் மற்றும் பாசனம் தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளுக்கும் இதற்கான பங்கை அளிக்கவேண்டிய தேவை உள்ளது.

07. மாவட்ட ஊராட்சிக்கு, சிறுபாசனம் மற்றும் நுண்பாசனத்துடன் கூடிய பாசன மேம்பாட்டத் திட்டங்களை கொண்ட தொலைநோக்கு திட்டங்களை உருவாக்கவும், நிலையான வேளாண்மை குழுவின் உதவியுடன் அதை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்யவும் அதிகாரம் வழங்கலாம். மேலும், இம்மாவட்ட ஊராட்சியானது, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆண்டுதோறும் தேவையான மானியத்தை அரசிடம் இருந்து பெற்று தரவும் பரிந்துரை மற்றும் ஆலோசனை வழங்கலாம். ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிக்கான திட்டங்களை உருவாக்கவும், அதை நடைமுறைப்படுத்தவும், அதன் கழிவு நீர்குட்டைகள் மற்றும் தடுப்பணை கட்டுவதற்கும் அதற்குரிய பயன்பெறுவோரை கண்டறிபவும் வழிவகை செய்யலாம். மேலும், ஊராட்சிகள் ஒன்றியங்கள், குடிமராமத்து முறை செயல் படுத்தவும் மற்றும் அதற்குரிய நீர்பாசனம் மற்றும் வடிகால் பராமரிப்புக்குரிய கட்டணங்கள் வசூலிக்கவும், ஊராட்சிக்கு உதவிபுரியலாம். குடிமராமத்து மற்றும் நீர்பாசன பாராமரிப்புக் குரிய பலவகை திட்டகளை செயல்படுத்துவதிலும். அதற்குரிய பயனாளிகளை கண்டறியவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கலாம். இத்துடன். பாசன பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், நீர் விநியோக சுழல்முறையை செயல்படுத்துவதிலும், கசிவு நீர் குட்டைகளை பராமரிப்பதிலும் ஊராட்சிகள் ஈடுபடும். உள்ளூர் தகராறு ஏதாவது இருந்தால் சிற்றூராட்சிகள் தீர்வு காண்பதில் உதவும். மாநில திட்டக்குழு பிரிவின் பரிந்துரைகள் விளக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

## I. ஊராட்சி

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | சிறுபாசனம், நீர் வினியோக முறை, வடிகால் அமைப்பு மற்றும் நீர்பாசன மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்துதல். | (அ) | நீர்ப் பாசனத் திட்டங்களை தோற்று விப்பதில் உதவுதல். |
| | | (ஆ) | குளங்களை ஆழப்படுத்துதல், கால் வாய்கள், ஏரிகள் மற்றும் வடிகால் களைத் தூரெடுப்பு செய்து சுத்த மாக்குதல் போன்ற சமுதாய சிறு பாசனத் திட்டங்களை நிறை வேற்றல். |
| | | (இ) | மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தால் ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்கள் உள்பட தொட்டிகளையும், நீர்தடுப்புச்சுவர்அணைகளையும் கட்டுதல். |
| | | (ஈ) | குறிப்பிடப்பட்டுள்ள தரத்தின் படி கிணறுகளுக்கிடையிலான இடை வெளியை (கிணற்றின் நீர்ச்செறிவு) நெறிமுறைப்படுத்தல். |
| | | (உ) | சிறு பாசனத் திட்டங்களுக்கான பல்வேறு திட்டங்களின் கீழ் பயனாளர் களைக் கண்டறிதல். |
| 2. | நுண்மநீர்ப் பாசன முறைகளை மேம்படுத்துதல் | (அ) | விவசாயிகளின் (விவசாயப்) பகுதியையும் நீர்தெளிப்புப் பாசனம், சொட்டு நீர்ப் பாசன வசதி அளிக்கப்பெற்றுள்ள பயிர்களையும் கண்டறிதல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 3. நீர்பாசன வள ஆதாரத்தைப் பராமரித்தல் | (அ) நீர்பயனாளர் குழுமத்தின் மூலம் சிறுபாசன பராமரிப்பில் பாரம்பரிய முறைகளை தொடருதல் மற்றும் பலப்படுத்துதல். |
| | (ஆ) குறிப்பாக அரசால் ஒப்படைக்கப்பட்ட ஆட்சி எல்லையில் நீர்ப்பாசன வள ஆதாரங்களைப் பராமரிப்பதற்காக குடிமராமத்தைச் செயற்படுத்தல். |
| | (இ) ஊராட்சி கிராமத்தில் அனைத்து நீர்கசிவுக் குட்டைகளையும் பராமரித்தல். |
| | (ஈ) நீரைப் பயன்படுத்தும் குழுக்களின் ஒத்துழைப்புடன் நீர்பாசனப் படுகை பரப்பில் சுழல் முறையைச் (சுழல் முறையில் நீர் வழங்கல்) செயற் படுத்தல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. சிறுபாசனம், நீர் வினியோக முறை, கால்வாய் அமைப்பு, நுண்ம நீர்ப்பாசனத் திட்டம் உட்பட நீரை நிருவகித்தல் மற்றும் நுண்ம நீர்ப் பாசன தொடர்பிலான நடவடிக்கைகள் ஆகியவற்றை மேம்படுத்தல். | (அ) ஊராட்சி ஒன்றியத்திட்டத்தில் கருதப்பட்டுள்ள சிறுபாசனத் திட்டத்தைத் தோற்றுவித்தலும், தொழில் நுட்ப மதிப்பீடு செய்தலும். |
| | (ஆ) ஊராட்சி ஒன்றியத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறுபாசனத் திட்டங் களையும் அரசாலும் பிறமுகமை –களாலும் உருவாக்கப் பெற்ற திட்டங்களைச் செயற்படுத்தலும். |
| | (இ) சிற்றூராட்சிகளிடம் ஒப்படைக்கப் பெறாத நீர்கசிவுக் குட்டைகளையும் நீர்த்தடுப்புச் சுவர் அணைக் கட்டு களையும் கட்டுமானம் செய்தல். |
| | (ஈ) சிறுபாசனத் திட்டங்களுக்கும், நுண்ம நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் பயனாளர்களைத் தெரிவு செய்தலில், சிற்றூராட்சி களுக்கு உதவிபுரிதல், மற்றும் மானியம் மற்றும் வங்கிக் கடன்களின் ஒப் பளிப்புக்குப் பரிந்துரை செய்தல். |
| 2. ஊராட்சி ஒன்றிய ஏரிகள் உள்பட சிறுபாசன வள ஆதாரங்களைப் பராமரித்தல் | (அ) குடிமராமத்தை செயற்படுத்துவதில், சிற்றூராட்சிகளுக்கு உதவுதல். நீர்ப்பாசன மற்றும் வடிகால் அமைப்புகளின் பராமரிப்புக்கு கட்டணம் வசூலித்தல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | (ஆ) அரசு மானியத்துடன் ஊராட்சி ஒன்றிய ஏரிகளைப பராமரித்தல். |
| | (இ) அரசால் ஒதுக்கப்பட்ட நீர்ப்பாசன ஆதாரங்களைப் பராமரிப்பதற்காக பாசனப் பரப்புதாரர்களிடம் கட்டண விதிப்பு செய்தல். |
| | (ஈ) நீர் பங்கீட்டில் (சுழல் முறையில் நீர் வழங்கல்) முறை மாற்று முறையை பயனுள்ள முறையில் செயற்படுத்து வதற்காக நீர் உபயோகிப்போர் மன்றத்திற்கு உதவிபுரிதல் மற்றும் சிறு பாசன வளஆதாரங்களை பராமரித்தல். |
| 3. சிறு மற்றும் நுண்மநீர்ப்பாசனத் திட்டங்களை ஆய்வு செய்தல் | (அ) சிறு மற்றும் நுண்ம நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான பணிகளின் முன்னேற்றத்தையும், தரத்தையும் மேற்பார்வையிடுதல், கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல். ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்பெறும் ஆய்வில் பொதுப்பணித் துறையின் நிருவாகப் பொறியாளர்கள், வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் உதவி இயக்குநர் ஆகியோர் பங்கேற்றல். |
| | (ஆ) சிறுபாசன மற்றும் நுண்ம நீர்பாசனத் திட்டங்களுக்கு பாசனத்துடன் தொடர் புடைய பல்வேறு துறைகள் / முகமை களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல். |

## III. மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. சிறுபாசனத் திட்டங்கள், நுண்ம நீர்ப்பாசனம், நீர் அனுப்பும் முறை வடிகால் அமைப்பு மற்றும் நீரை நிருவகித்தல் தொடர்பிலான பணிகள் முதலியவற்றை மேம்படுத்தல் முதலியன. | (அ) சிறுபாசனம், நுண்ம நீர்ப்பாசனம் மற்றும் பாசனப்படுகைப் பகுதி மேம்பாடு ஆகிய பணிகளில் மாவட்டத் தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்குதல். |
| | (ஆ) மாவட்ட அளவில் செயற்படுத்தப்பட்டு வரும் சிறுபாசனம், நுண்ம நீர்ப் பாசனத் திட்டங்கள், பாசனப் படுகைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், ஆகியவற்றை ஆய்வு செய்தலும், கண் காணித்தலும். |
| | (இ) மாநில அரசு மைய அரசின் அதிகாரி களிடமிருந்து உரிய நிதியைப் பெறுவதற் காகத் தொடர்புடைய மண்டல தலைமைப் பொறியாளர்களுக்குக் கருத்துருக் களைத் தயாரித்து அனுப்புதல். |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 2. நீர்ப்பாசன முறைகளை பராமரிப்பதன் மீது அரசுக்கு அறிவுரை செய்தல். | (அ) | ஒவ்வொரு சிற்றூராட்சியாலும் ஊராட்சி ஒன்றியத்தாலும் பராமரிக்கப் படவேண்டிய ஏரிகளின் விவரங்கள் குறித்து அரசுக்கு அறிவுரை அளித்தல். |
| | (ஆ) | ஒவ்வொரு சிற்றூராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுதோறும் விடு விக்கப்பட வேண்டிய நீர்ப்பாசன மானியங்களை அரசுக்குப் பரிந்து ரைத்தல். |

## நிர்வாக மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்கள்

08. மேலே கருதப்பட்டுள்ள அதிகார ஒப்படைப்பானது, ஊராட்சி நிறுவனங்களுக்கு, தொழில்நுட்ப அல்லது பிற பணியாளரின் மாற்றம் எதையும் குறிப்பிடவில்லை. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, (அ) சிறு, நுண்ம பாசனத்திட்டங்களையும் பிற பாசனத் திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் (ஆ) அந்நீர்பாசன ஆதாரங்களைப் பராமரித்தல் ஆகியவை தொடர்பில் பாசனத்துடன் தொடர்புடைய துறை களிலிருந்தும் உள்ளடக்கிய மற்றும் விரிவான தொழில் நுட்ப ஆதரவு வசதிகள் அதிகமாகத் தேவைப்படலாம். ஏரிகள் மற்றும் பிற நீர்ப் பாசன ஆதாரங்களை முழு அளவில் பராமரிப்பதற்கு பயன்படுத்துவோர் / மக்களின் பங்கெடுப்பு ஒருபுறமும், தொழில் நுட்பத்திறன் உடையவர்கள் அரசின் நிதி ஆதரவு ஆகியன மறுபுறமுமாக ஊராட்சிகள் இயங்க வேண்டும். இவ்வாறாக தொழில்நுட்ப துறையின் உடனடி உதவி கிடைக்கப்பெறாத இடங்களில் ஓய்வு பெற்ற பொறியியல் வல்லுநர்களை ஒரு குறிப்பிட்ட வேலைகட்கு பயன்படுத்தினால் திட்டத்தை காலதாமதமின்றி உடனடியாக செயல்படுத்த வாய்ப்பு உண்டு. அரசு கொடுக்கும் மானியத்தில், குறிப்பிட்ட சிறிய விழுக்காடுகள் பொறியியல் வல்லுநர்களுக்கு செலுத்தலாம்.

## நிதிச் சிக்கல்கள்

09. மாநில அரசு, சிறு பாசனத் திட்டங்களுக்கு நிதி அளிக்கிறது. அது, ஊராட்சி நிறுவனங்களுக்கும் அல்லது மண்டலத் தலைமைப் பொறியாளர்களுக்கும் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. மாநில அரசிடமிருந்து திட்டம் சாரா பணிகள், மாநிலத் திட்டப் பணிகள், மைய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களும், உலக வங்கியின் உதவி பெற்ற திட்டங்கள், மற்றும் வட்டார நீர்பாசன மானியங்கள் ஆகியவற்றிலிருந்தும் உதவிகள் பெறப்படுகின்றன. **1995–96** ஆம் ஆண்டுக்கு மாநில சிறு பாசனத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.10.00 கோடிகளாகும். பின்வரும் நிதிகள், சிறு பாசனத் திட்டங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டவையாகும். இவை, மாவட்டப்பன்முகப் படுத்தப்பட்ட திட்டங்கள், நுண்ம நீர்ப்பாசனத் திட்டங்கள், பாசனப் படுகைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், ஜீவன் தாரா திட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன மானியங்கள் ஆகியவற்றின் கீழான நிதிகள் சேர்க்கப்படவில்லை.

**(ரூ. இலட்சங்களில்)**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| **எண்** | **திட்டத்தின் பெயர்** | **1994–1995** | **1995–1996** | **1996–1997** |
| 1. | ஊராட்சி ஒன்றியங்கள்களின் உரிமையில் 100 ஹெக்டேருக்குக் குறைவான பாசனப் பரப்பைக் கொண்ட நீர்ப்பாசன ஏரிகளைத் தரம்படுத்தலும் மேம்படுத்தலும். | 44.09 | – | – |
| 2. | ஊரகப் பகுதிகளிலுள்ள சிறு பாசன ஏரிகளை மேம்படுத்து வதற்கான சிறப்புத் திட்டம் | 235.00 | 235.00 | 235.00 |

(ரூ. இலட்சங்களில்)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| எண் | திட்டத்தின் பெயர் | 1994-1995 | 1995-1996 | 1996-1997 |
| 3. | முன்னாள் ஜமீன் ஏரிகளைச் சீராக்கம் செய்தல் | 211.01 | – | – |
| 4. | சிறப்பு சிறு பாசனத்திட்டம் | 370.91 | 510.00 | 559.00 |
| 5. | ஏரிகளைத் தூர்வாருதல்–பண்படுத்தல் | 13.55 | 8.00 | 1.20 |
| 6. | மாநில சிறுபாசனத் திட்டம் முன்னாள் ஜமீன் ஏரிகள் | – | 500.00 | 500.00 |
| 7. | மாநில சிறு பாசனத் திட்டம் – பொதுப் பணித்துறை ஏரிகள் | – | 500.00 | 500.00 |
| | **மொத்தம்** | **874.56** | **1753.00** | **1795.20** |

ஆதாரம் : திட்டம் – வரவு செலவுத்திட்ட இணைப்படி, 1996–97

10. இம்மாநிலத்தில், 12584 ஊராட்சிகளும் 384 ஊராட்சி ஒன்றியங்களும் இயங்கி வருகின்றன. சிற்றூராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் அவற்றிற்கு அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளின் பராமரிப்புக்கும் சொந்தமாக நிதிகளைக் கொண்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் எட்டுவகையான கணக்கு தொகுப்புக் களை பராமரித்து வருகின்றன. அஃதாவது "ஊரக நிதிகணக்கு I முதல் VIII" வரை".

11. ஊரக வளர்ச்சித் துறையின் 27 ஆவது எண்ணுள்ள கோரிக்கையின்படி, ஊராட்சி ஒன்றியங்கள் 3,28,076 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 23,761 சிறுபாசனத் திட்ட ஏரிகளை பராமரித்து வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலுமுள்ள, சிறு பாசனத் திட்ட ஏரிகள் அனைத்தையும் ஐந்தாண்டு சுழற்சி முறையைப் பின்பற்றி பராமரிப்பதற்கான திட்ட மொன்று தயாரிக்கப்பட உள்ளது. 1996–97 ஆம் ஆண்டில், ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி அதிகார மாற்றம், ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை ஒத்திருக்க வேண்டும். நீர்பாசனப் பராமரிப்பு நேர்வில். இதுவரை அரசால் விடுவிக்கப்பட்ட மானியங்களின் அளவு போதுமானதாக இல்லையென்று கருதப்படுகிறது. மாநிலத் திட்டக்குழு நீர்ப்பாசன மானியங்களில் நியாயமான மதிப்பீடு இருக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கிறது.